No. of Printed Pages : 8

348598

**4311**

பதிவு எண் | | | | | | |

# தமிழ் இரண்டாம் தாள்

# Language – Part A – TAMIL – Paper II

(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை** (i) அனைத்து வினாக்களும்'சரியாக அச்சுப்பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்து கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(ii) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு** (i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

## பிரிவு - I

(மதிப்பெண்கள் : 20)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க**

**பகுதி - 1**

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5x1=5**

**1.** ஈற்றில் ஐகாரம் குறைந்து வந்த சொல் ______________ ஆகும்.

(அ) திண்ணை (ஆ) வளையல்

(இ) ஐந்து (ஈ) தலைவன்

**2.** மாடு என்னும் சொல்______________ஆகும்.

(அ) உயர் திணைப் பொதுப் பெயர் (ஆ) அஃறிணைப் பொதுப் பெயர்

(இ) உயர்திணைச் சிறப்புப் பெயர் (ஈ) விரவுப் பெயர்

**3.** மேற்கு + நாடு______________எனச் சேரும்.

(அ) மேற்கு நாடு (ஆ) மேநாடு

(இ) மேனாடு (ஈ) மேற்நாடு

[ திருப்புக

4. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது__________ .
(அ) பொது மொழி (ஆ) தொடர் மொழி
(இ) தனி மொழி (ஈ) இன மொழி

5. பாடாண் திணை என்பது__________கூறுவது.
(அ) ஆண் மகனின் ஒழுகலாறுகள்
(ஆ) போரின் தன்மைகள்
(இ) பெண் மகளின் ஒழுகலாறுகள்
(ஈ) வீரர்கள் ஆநிரை கவர்தல்

## பகுதி - 2

**கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5x1=5**

6. படித்து வந்தான் - இதில் படித்து என்பது __________ ஆகும்.

7. ஆடத் தெரியுமா? என்ற வினாவிற்குப் பாடத் தெரியும் எனக் கூறுவது __________ விடை.

8. மலரன்ன சேவடி - இச்சொல்லில் __________ என்பது உவம உருபாகும்.

9. மார்கழி, தை ஆகிய இரண்டும் __________ காலத்திற்குரியன.

10. ஆசிரியப்பாவின் வேறு பெயர் __________ ஆகும்.

## பகுதி - 3

**சுருக்கமாக விடையளிக்க.** **10x1=10**

11. வல்லினம் மிகா இடங்களுள் ஒன்றனைச் சான்று தந்து விளக்குக.

12. உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக.
வேல் விழி திருக்குறள் படித்தாள்.

13. உரிய வினை மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
மாறன் ஓவியத்தை __________ (வரைந்தான், புனைந்தான்)

14. தொகைச் சொல்லை விரித்து எழுதுக.
ஐந்திணை

15. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமைப் பன்மைப் பிழை நீக்கி எழுதுக.
திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி ஒலிப் படக் கருவி என்ற கருவி பயன்படுகின்றன.

16. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக.
மனித இனத்தின் மரபு செல்வமாக தமிழ்மொழி விளங்குகிறது.

17. கீழ்க்காணும் தொடரில் அமைந்துள்ள பிற மொழிச் சொற்களுக்கு உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.
இந்த ஷர்ட் மிகவும் காஸ்ட்லியானது.

18. கீழ்க்காணும் தொடருக்குப் பொருத்தமான நிறுத்தற் குறியிட்டு எழுதுக.
கதைப்படங்கள் மட்டுமின்றிக் கருத்துப் படங்கள் செய்திப் படங்கள் விளக்கப் படங்கள் கல்விப்படங்கள் எனப் பல வளர்ச்சி நிலைகளைத் திரைப்படத்துறை எட்டியுள்ளது.

19. கீழ்க்காணும் தொடரிலுள்ள வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக.
இன்னக்கி ஒரு கிலோ அவரக்கா வாங்கி வந்தேன்.

20. கீழ்க்காணும் அடிக்கோடிட்ட மரபுத் தொடர் குறிக்கும் பொருளை எழுதுக.
எம்.ஜி.இராமச்சந்திரன் திரைவானில் <u>கொடிகட்டிப்</u> பறந்தார்.

## பிரிவு - II

(மதிப்பெண்கள் : 10)

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க. 5x2=10**

21. ஐகாரக் குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

22. பெயரெச்சம் என்றால் என்ன?

23. அடுக்குத் தொடர் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

[ திருப்புக

24. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

25. செம்மை + மொழி எவ்வாறு புணரும்?

26. முதற் பொருள் என்பது யாது?

27. புறத்திணைகள் நான்கினை எழுதுக.

## பிரிவு - III

(மதிப்பெண்கள் : 50)

**குறிப்பு :** பகுதி -**3** இல் வினா எண் **35** இல் காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.

### பகுதி - 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க.** 2x5=10

28. வெண்பாவின் பொது இலக்கணம் யாது?

29. தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான் -
இதில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.

**அல்லது**

தற்குறிப்பேற்ற அணியைச் சான்று தந்து விளக்குக.

30. கீழ்க்காணும் குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக.
நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

### பகுதி - 2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டிற்கு ஒவ்வொன்றிற்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்க.** 2x5=10

31. பரிதிமாற்கலைஞரின் தமிழ்த் தொண்டினை விவரிக்க.

32. பாரத ரத்னா எம்.ஜி.இராமச்சந்திரன் பற்றிக் கட்டுரை எழுதுக.

33. 'குறட்டை ஒலி' என்னும் கதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்கி எழுதுக.

## பகுதி - 3

34. கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.

(அ) "சன்டே வர்றதுக்கு இன்னும் ஸிக்ஸ் டேஸ் இருக்குதே, டோண்ட் வொர்ரி. டுமாரோ ஈவினிங் ஷாப்பிங் போலாம். இப்ப உனக்கு ஹேப்பி தானே." 3+2=5

(ஆ) கீழுள்ள அரபு எண்களைத் தமிழெண்களாக மாற்றுக.
92, 81, 100, 253.

35. கீழ்க்காணும் ஆங்கில உரைப்பகுதியைத் தமிழாக்கம் செய்க. 3+2=5

(அ) Trees are very useful to us. They give us timber and firewood. The timber is used to make chairs, tables and other furniture. We get oil from the oil seeds of some trees. The leaves and fruits of some trees are used to prepare medicines.

(ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டனுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.

(1) Health is wealth.
(2) Diamonds cut diamonds.
(3) Little strokes fell great oaks.
(4) Look before you leap.

35. **குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா.** 5x1=5

விருது நகரில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதில், தந்தை பெரியார் பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுது, கூட்டத்திலிருந்து ஒருவர் கத்தியுடன் பெரியார் மீது பாய்ந்தார். பெரியார் சிறிதும் பதற்றமின்றி, அவர் கையை எட்டிப் பிடித்தார். அவரை நோக்கிப் பாய்ந்த தொண்டர்களை அமைதியாக இருக்கும்படி கேட்டுக் கொண்டார். தன்னைத் தாக்குவதற்காகக் கத்தியோடு பாய்ந்த அவரை, மேடையில் தன் அருகிலேயே உட்கார வைத்துக் கொண்டு, தொடர்ந்து உரையாற்றினார்.

கூட்டம் முடிந்த பிறகு, அவரை ஒன்றும் செய்யாமல் பாதுகாப்பாக அவருடைய வீட்டில் கொண்டு போய் விடும்படி கட்டளையிட்டார். காரணம், அவரைத் தனியாக விட்டால் தன்மீது பற்றுக் கொண்ட தோழர்கள் யாராவது, அவரைத் தாக்கித் துன்புறுத்துவார்கள் என்று நினைத்தார். பெரியாரின் வாழ்வில் நடந்த இந்நிகழ்ச்சி பகைவரிடமும் அன்பு செலுத்த வேண்டும் என்னும் உயரிய பண்பினை உணர்த்துகிறது.

(1) பொதுக்கூட்டம் நடைபெற்ற ஊரின் பெயர் என்ன?
(2) பொதுக்கூட்டத்தில் பேசிய தலைவரின் பெயர் என்ன?
(3) தன்னைத் தாக்க வந்தவரை பெரியார் என்ன செய்தார்?
(4) தாக்க வந்தவரைத் தனியாக விட்டால் தோழர்கள் என்ன செய்வர்?
(5) பெரியாரின் வாழ்வில் நடந்த இந்நிகழ்ச்சி எந்தப் பண்பினை உணர்த்துகிறது?

பகுதி - 4

**36. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க.** 1x5=5

(அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்புத் தருக.

கண்ணன் பத்தாம் வகுப்பில் படிக்கிறான். காலையில் ஐந்து மணிக்கே எழுந்து விடுவான். அவனுடைய அம்மாவுக்கு அவனால் இயன்ற உதவிகளைச் செய்வான். பின்னர் எட்டு மணியளவில் நடந்தே பள்ளிக்குச் செல்வான். ஒரு நாள் ஓட்டமும் நடையுமாய்ப் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தான். அப்போது சாலையில் .......

**அல்லது**

(ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று எழுதுக.

கார்மேகம் அல்லது குழந்தை.

பகுதி - 5

**37.** கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களை எடுத்தெழுதுக. **1x5=5**

மனிதரெலாம் அன்புநெறி காண்ப தற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து
தனிமனிதத் தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்
இனிதினிதாய் எழுந்த உயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர் தரு சுவடிச் சாலை
புனிதமுற்று மக்கள் புது வாழ்வு வேண்டில்
புத்தகசா லைவேண்டும் நாட்டில் யாண்டும்.

- பாரதிதாசன்

## பகுதி - 6

**38.** இளஞ்செழியன் என்பவர் வங்கிக் கணக்கில் பணம் செலுத்த உள்ளார். தேர்வர் தன்னை இளஞ்செழியனாக பாவித்து விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் உரிய படிவத்தினை தேர்ந்தெடுத்து பூர்த்தி செய்க. **1x5=5**

## பகுதி - 7

**39.** (அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து விடையளிக்க. **3+2=5**

பாண்டியன் ஒவ்வொரு தேர்விலும் அறுபது மதிப்பெண்களுக்குக் குறையாமல் பெறுவான். ஆனால், அவன் தந்தை அம்மதிப்பெண் போதாது என்றும், மேலும் முயற்சி செய்ய வேண்டும் என்றும் வற்புறுத்துகிறார். அதிக மதிப்பெண் பெறுவதற்காக அவனைத் தனிப்படிப்புக்கும் அனுப்புகிறார். தனிப்படிப்புச் சொல்லித் தருபவரின் பழகுந்தன்மை, அவனுக்கு பிடிக்கவில்லை. வீட்டில் சொன்னால் தனிப்படிப்புக்குச் செல்ல விருப்பமில்லாமல் இவ்வாறு கூறுகிறான் என்று நினைப்பர் என மனத்துயரம் கொள்கிறான்.

(1) பாண்டியன், தன் சிக்கலுக்கு எப்படித் தீர்வு காண்பான்?

(2) நீங்கள் பாண்டியனாக இருந்தால் என்ன செய்வீர்கள்?

(3) இச்சூழலில் வெளிப்படும் திறன் யாது?

(ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையளிக்க.

மாறன் பத்தாம் வகுப்புப் படிக்கிறான். சில நாளாக அவன் செயல்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைப் பெற்றோர் உணர்ந்தனர். பள்ளி நேரம் முடிந்தும் அவன் வீட்டிற்குத் தாமதாமாக வருகின்றான். காரணம் கேட்டால், உண்மையைச் சொல்ல மறுக்கின்றான். வீட்டில் அடிக்கடி பணம் கேட்டுத் தொந்தரவு செய்கின்றான். நல்ல நண்பர்களுடன் அவன் பழகாததே இதற்குக் காரணம் என்று பெற்றோர் நினைக்கின்றனர்.

(1) பெற்றோர் மாறனைப் பற்றி நினைப்பது சரியா?

(2) நாம் எப்படிப்பட்டவர்களோடு நட்புக் கொள்ள வேண்டும் ?

[ திருப்புக

June 2014 www.tnschools.co.in

பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 20)

பகுதி - 1

40. **கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க.** 1x10=10

(அ) குடிநீர் வசதி வேண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையருக்குக் கூட்டு விண்ணப்பம் எழுது.

**அல்லது**

(ஆ) வெள்ளத்தில் மூழ்கிய சிறுவனைக் காப்பாற்றியமைக்காக அண்ணா விருது பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுது.

பகுதி - 2

41. **கீழுள்ள வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்குக் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக. தலைப்பு ஒன்று தருக.** 1x10=10

(அ) சுற்றுச் சூழல் - மாசுக் கட்டுப்பாடு - நீர் மாசு - நிலம் மாசு - காற்று மாசு - தீமைகள் - வழிகள்.

**அல்லது**

(ஆ) கணினி - தோற்றம் - வளர்ச்சி - இணையம் - இணையதள வசதிகள் - கணினி வழிக்கல்வி - கணினியின் வியத்தரு சாதனைகள் - பயன்படும் துறைகள் - உலகம் உள்ளங்கையில்.

-o0o-